


# இசைப் பிரியர்களுக்கு ஓர் மடல்

## மொழியாக்கம்: யூ. எல். அப்துல் வஹ்ஹாப்

**வெளியீடு:**
**ஜம்இய்யா இஹ்யாவுத்துராதுல் இஸ்லாமிய்யா**
**குவைத்**

இஸ்லாமிய சகோதரனே! அல்லாஹ்வை ரப்பாகவும், இஸ்லாத்தை மார்க்கமாகவும், முஹம்மத் (ஸல்) அவர்களை தூதராகவும் ஏற்றுக் கொண்ட நீ... எனக்கும் உனக்கும் நேர்வழியை காட்டியவன் அல்லாஹ்தான் என்பதை தெரிந்து கொள். ஒரு முஸ்லிம் அவசியமாக உறுதியான நம்பிக்கைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டும். அவன் தான் தனது எஜமானுக்கு சிறந்த முறையில் வழிபடக் கூடியவன்.

அல்லாஹுக்குறிய கண்ணியம் அவனை வழிபடுவதேயாகும். எனவே ஒரு அடியான் தனது எஜமான் ஏவிய கடமைகளை நிறைவேற்றுவதும், தடுத்த காரியங்களிலிருந்து விலகி இருத்தல் வேண்டும். அத்துடன் அல்லாஹ்வின் பெயர் ஞாபகப்படுத்தப்பட்டால் தீய காரியத்தினை விட்டும் விலகிக் கொள்வான். அதேபோல் அவர்களுக்குத் தீர்ப்பு அளிப்பதற்காக அல்லாஹ்வினதும் தூதரினதும் போதனைகளின் பக்கம் அழைக்கப்பட்டால் செவிமடுத்தோம், கட்டுப்பட்டோம் என்று பணிந்து விடுவார்கள். இதுபற்றி அல்லாஹுத்தாஆலா பின்வருமாறு கூறுகிறான்:-

"நிச்சயமாக மு.ஃமின்களின் வார்த்தை எப்படி இருக்குமென்றால் அவர்களுக்குத் தீர்ப்பளிப்பதற்காக அல்லாஹ்வின் பாலும், தூதரின் பாலும் அவர்களை அழைத்தால், கேட்டோம், கட்டுப்பட்டோம் என்று கூறுவார்கள். அவர்கள் தான் வெற்றி பெற்றோர்" (அந்நூர்-51)

இஸ்லாமிய சகோதரனே! நேர்வழியிலிருந்து தடுத்து அல்லாஹ்வின் அடியார்களை வழிகேட்டில்

வீழ்த்தக்கூடிய ஷைத்தானின் மிகப்பெரும் ஆயுதம் இசையும், பாடலும் ஆகும் என்பதனை அறிந்து கொள்வாயாக. மற்றும் இவ்விரண்டினையும் ஒரு மனிதர் ஹராம் என்று சொன்னால் அவரை பிற்போக்குவாதி, தீவிரவாதி என விமர்சிக்கும் அளவுக்கு இசையும், பாடலும் மக்கள் மத்தியில் பரவி தீய விளைவுகளை ஏற்படுத்தி இருக்கிறது. இதுபோன்று தான் குழல் இசைகளும் இன்று ஒவ்வொரு வீடுகளிலும் வானொலி, தொலைக்காட்சிகள் மூலமாகவும் பாடசாலைகளிலும், வீதிகளிலும், வாகனங்களிலும் கேட்கக் கூடியதாக ஆகி விட்டது. அது மட்டுமின்றி இசையினை கற்றுக் கொடுப்பதற்கென்றே பாடசாலைகளும் உருவெடுத்திருக்கின்றன. ஆனால் அந்தப் பாவிகள் இவைகளிலிருந்து உழைக்கின்ற பணம் ஹராமானவை என்பதை அறிய மாட்டார்கள்.

இஸ்லாமிய சகோதரனே! இசையும், பாடலும் ஹராம் என்பதற்கான அல்குர்ஆன், சுன்னாவின் ஆதாரம் என்ன? என நீ கேட்கலாம். இதோ அதற்கு குர்ஆன், சுன்னாவிலிருந்து தெளிவான ஆதாரங்கள் இருக்கின்றன.

### (மஆஸிப்) குழல் ஹராம் என்பதற்கான அல்குர்ஆனின் ஆதாரம்

**முதலாவது சான்று:** அல்லாஹுத்தஆலா ஷைத்தானுக்கும் அவனுடைய கூட்டத்தாருக்கும் கூறுகிறான்:

“அவர்கள் தம்மால் முடிந்தவர்களை அக்கூடாததன் ஓசைகளின் பால் அழைத்துக் கொள்ளட்டும். மற்றும் தமது கால்படை, குதிரைப் படை, (கூடாத) செல்வம், (கெட்ட) பிள்ளைகளையும் அவர்கள் சேர்த்துக் கொள்ளட்டும். ஆனால் அவர்களுக்கு வாக்களிக்கின்ற ஷைத்தான் ஏமாற்றத்தையன்றி வாக்களிக்க மாட்டான்” (அல்இஸ்ரா-64)

சமகாலத்தில் முபஸ்ஸிரீன்களின் தலைவராக இருந்த முஜாஹித் பின் ஜுபைர் அவர்கள் கூறுகிறார்கள்: வீணான, போலியான, கேலியானவைகளும், பாடலும் ஷைத்தானின் சத்தமாகும். அதாவது ஷைத்தான் தனது வலையில் சிக்கியவர்களின் அறிவினை மங்கச் செய்து, இறை நினைவிலிருந்து திருப்பி, பாடலிலும். இசையிலும் ஈடுபடுத்தி விடுகிறான்.

**இரண்டாவது சான்று:** “அறிவற்ற, அல்லாஹ்வின் பாதையை விட்டும் வழி கெடுக்கக்கூடிய வீணான வார்த்தைகளை யார் வாங்குகிறார்களோ அவர்களுக்கு அழிவு தரும் வேதனை இருக்கிறது” (லுக்மான்-6) என்று அல்லாஹுதஆலா கூறுகிறான்.

இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ‘வீணான வார்த்தை என்பது பாடலாகும்.’ இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள், ‘பாடல் மற்றும் அதனை ஒத்தவைகள் சம்பந்தமாகவே இவ்வசனம் அருளப்பட்டுள்ளது.’ என்று கூறினார்கள்.

சிந்தனையாளர்கள் ‘அனைத்து வீணான வார்த்தைகளும், பாடல்களும், இசைக்கருவிகளும் இவ்வசனம் மூலமாக தடை செய்யப்படுகின்றன.’ என்ற கருத்தைத் தெரிவிப்பதாக வாஹிதி அவர்கள் கூறுகிறார்கள்.

இப்னுல் கையும் (ரஹ்) அவர்கள் கூறினார்கள்: செயல்பாட்டு ரீதியிலோ, அறிவு பூர்வமாகவோ எவர் பாடல்களிலும், இசைக் கேட்பதிலும் கவனம் செலுத்துகிறாரோ அவர்களில் எவரும் நேர்வழியை விட்டு வழிகேட்டில் இருப்பதைதான் நீ காண்பாய். அதிலே அல்குர்ஆனை செவிமடுப்பதை விட பாடலைக் கேட்பது அவர்களுக்கு ஆர்வமாக இருக்கும். இவர்களுக்கு அல்குர்ஆனையும், பாடலையும் எடுத்துக் காட்டப்பட்டால், பாடலை அவர்கள் தேர்ந்தெடுப்பதையும். அல்குர்ஆனை செவிமடுப்பதை கடினமாக அவர்கள் கருதுவதையும் காணலாம்.

### பாடல் ஹராம் என்பதற்கான சுன்னாவின் ஆதாரம்.

அபூமாலிக் அஷ்அரி (ரலி) அவர்கள், நபி (ஸல்) அவர்களிடமிருந்து செவிமடுத்ததாகக் கூறுகிறார்கள்: ‘எனது சமூகத்தில் ஒரு கூட்டத்தினர் தோன்றுவார்கள். அவர்கள், விபச்சாரம், பட்டு, மது, இசை என்பவற்றை ஹலாலாக்கிக் கொள்வார்கள். சில கூட்டத்தினர் ஆட்டு மந்தைகளுடன் சென்று உல்லாசமாக இருப்பார்கள். அப்போது அவர்களிடம் தேவை கருதி சில ஏழைகள் வருவார்கள். (அவர்கள்) நீங்கள் நாளை வாருங்கள் என்று திருப்பி அனுப்பப்படுவர். எனவே அல்லாஹுத்தஆலா அவர்களை அப்படியே அழித்து விடுவான். மற்றும் சிலரை மறுமையில் குரங்குகளாகவும், பன்றிகளாவும் எழுப்புவான்.’ (புகாரி-5590)

எனவே குழலிசைகள், இசைக்கருவிகள் மற்றும் பியானோ, கித்தார் போன்றவைகள் ஹராம் என்பதற்கு மேற்கூறிய ஹதீஸ் தெளிவான ஆதாரமாகும். அதுமட்டுமின்றி நபி (ஸல்) அவர்கள் விபச்சாரம், மது, பட்டு போன்ற ஹராமான செயற்பாடுகளுடன் ஒப்பிட்டுள்ளார்கள். இன்னும் நபி (ஸல்) அவர்கள் நிச்சயமாக அவரது சமூகத்தில் சில மனிதர்கள் இருப்பார்கள் என்றும் அவர்கள் இதுபோன்ற செயல்பாடுகளை ஆகுமாக்குவார்களென்றும் அவர்களுக்கு மேற்சொன்ன வேதனைகளுண்டு எனவும் அறிவித்தார்கள். எனவே இவ்விஷயம் ஹராம் என்பதற்கு இது தெளிவான ஆதாரமாகும்.

**இரண்டாவது ஹதீஸ்:** நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'நிச்சயமாக நான் மிக மோசமான இரண்டு சப்தங்களைத் தடுக்கிறேன். அதில் ஒன்று மகிழ்ச்சியின் போது வேடிக்கையும், விளையாட்டும் இது ஷைத்தானின் இசையாகும். மற்றொன்று துன்பத்தின் போது முகத்தில் கீறிக் கொள்வதும், ஆடையைக் கிழித்துக் கொள்வதும் இது ஷைத்தானின் ஓசையாகும். (திர்மிதி) என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

இந்த ஹதீஸில் பாடலின் சத்தம் மிக மோசமான ஒலியாகவும், இசைக்கருவிகளை ஷைத்தானின் கருவிகளாகவும் நபி (ஸல்) அவர்கள் பெயர் சூட்டியிருக்கிறார்கள்.

ஷைகுல் இஸ்லாம் இப்னு தைமிய்யா (ரஹ்) அவர்கள் பாடல்கள் ஹராமானவை என்பதற்கு மிகச் சிறந்த ஆதாரமாக இந்த ஹதீஸ் இருக்கிறது என்று கூறினார்கள்.

இஸ்லாமிய சகோதரனே! இசையும் பாடலும் ஹராமானவை என்ற விஷயம் வெள்ளிடை மலைபோல் குர்ஆன் சுன்னாவிலிருந்து தெளிவான பின்னாலும், உனது கடமை என்ன? அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் பதிலளிக்கின்றாயா?

அல்லாஹ்தஆலா கூறுகிறான்: "ஈமான் கொண்டவர்களே! அல்லாஹ்வும் அவனது தூதரும் உங்களை வாழவைப்பதன் பக்கம் அழைத்தால் நீங்கள் பதிலளியுங்கள்." (அன்பால்-24)

"தனது இறைவனுக்கு அழகிய முறையில் பதிலளித்தவர்களுக்கு (மறுமையில்) நற்கூலியுண்டு." (அர்ரஃது-18)

நீ அதற்கு பதிலளித்தால் உன்னிடம் உண்மையான ஈமான் இருக்கிறது என்பதற்கான சான்றாகும். அல்லாஹ்தஆலா கூறுகிறான்:

"ஈமான் கொண்டு நல்லமல்கள் புரிபவர்களுக்கு இறைவன் (நல்ல முறையில்) பதிலளிக்கிறான்." (அஷ்ஷூஃரா-26)

அவ்வாறு பதிலளிக்காவிட்டால் உன்னை இறைவன் பின்வருமாறு எச்சரிக்கிறான்:

"அவனது கட்டளைகளுக்கு மாறு செய்பவர்களுக்கு (உலகத்தில்) கஷ்டமும், அல்லது (மறுமையில்) கடுமையான வேதனையுமுண்டு என்பதனைக் கொண்டு எச்சரிக்கைப் பெறுங்கள்." (அந்நூர்-63)

**எச்சரிக்கை:** முஸ்லிம் சகோதரனே! நிச்சயமாக அல்லாஹ்தஆலா ஒரு பொருளை தடை செய்தால் அதனை (இது போன்ற அழிவு தரும் கருவிகளை) வாங்குவதையும், விற்பதையும் சேர்த்தே ஹராமாக்குகிறான். அதனை பின்வரும் ஹதீஸும் உறுதிப்படுத்துகின்றது.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'அல்லாஹ்தஆலா ஒரு பொருளைத் தடை செய்தால் அதன் விலையினையும் ஹராமாக்குகிறான்' (அபூதாவூத்)

இதனடிப்படையில் இசைக்கருவிகளை விற்பதோ, இசை நிகழ்ச்சிகள், பாட்டு கச்சேரிகளுக்கான நுழைவுச் சீட்டுகள் விற்பதோ தடை செய்யப்பட்டது என்பது தெளிவாகிறது. அதிலும் குறிப்பாக அந்நிகழ்ச்சிகளில் ஆணும், பெண்ணும் கலந்து கொள்ளக்கூடிய, அல்லது மோசமான முறையில் நிர்வாணிகளாகவும், சிலவேளை அப்பெண்கள் நஸ்ரானிகளாக இருக்கக்கூடிய இந்நிகழ்ச்சிகளுக்கான அனுமதிப் பத்திரங்களை வியாபாரம் செய்வது தடை செய்யப்பட்ட விஷயமாகும்.

இதுபற்றி நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்கள்: 'மனிதர்களில் இரண்டு பிரிவினர் நரகத்திற்கு அருகதையானவர்கள். அவர்களில் ஒரு பிரிவினர், அவர்களிடம் மாட்டில் வால் போன்ற கசை (சவுக்) இருக்கும். அதனால் மக்களை அடித்துக் கொண்டிருப்பார்கள். மற்றும் அத்துமீறிய நிர்வாணமான பெண்கள் வளைந்து நெளிந்து கொண்டிருப்பார்கள். அவர்கலது தலைகள் பெரியதாக திமில்கள் உடையதாக இருக்கும். அவர்கள் சுவனத்தையோ, சுவனத்தின் வாடையையோ அடைந்து கொள்ள மாட்டார்கள். மாற்றமாக அவர்களுக்கு தொலைவிலிருந்து அதன் வாடை இப்படித்தான் இருக்கும் என்று காண்பிக்கப்படும்' (முஸ்லிம்)

எனவே இஸ்லாமிய சகோதரனே! நிச்சயமாக இசை, பாடல் கச்சேரிகள் மூலமாக உழைக்கின்ற பணம் ஹராமானது. அவைகளில் அல்லாஹ்வின் அருளில்லை என்பதுடன் அவைகளை அல்லாஹ் அழித்து விடுகிறான். என்பதைப் புரிந்துக் கொள்!

இதுபற்றி நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்கள்: 'கஃப் பின் உஜ்ராவே! நிச்சயமாக ஹராமின் மூலம் வளர்ந்த உடலும் இரத்தமும் சுவனம் புகமாட்டாது. அதற்குப் பொருத்தமான இடம் நரகமேயாகும்.' என்று கூறினார்கள். (திர்மிதி, இப்னு ஹிப்பான், ஸஹீஹ் அல்பானி)

மென்னூல் ஆக்கம்:

இஸ்லாம் குரல்.காம்

